பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 02 செவ்வாய்க்கிழமை 19.10.2021 கதிர் 211

7 கோடி ரூபா பெறுமதியான

## தங்கக் கட்டிகளுடன் ஒருவர் மாட்டினார்!

ஏழு கோடி ரூபா பெறுமதியான 4 கிலோ 800 கிராம் தங்கக் கட்டிகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். 2



## மதுப் போத்தல்கள் கடற்படையினரிடம் வசமாகச் சிக்கின!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்கு அனுமதிப் பத்திரம் இன்றி ஹயஸ் வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்ட மதுபானப் போத்தல்கள் இன்று அதிகாலை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. 2

## 26 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலையுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 26 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. 2

## நிமலராஜனின் நினைவேந்தல்




(இ.கலையமுதன்)

*ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.* 2



## சம்பந்தனை நேரில் சந்தித்தார் ஆளுநர்

புதிய வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை இன்று கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். 2

வவுனியா விபத்தில்

## உயிரிழந்த சிறுவனுக்கு கொரோனா

வாகன விபத்தில் உயிரிழந்த சிறுவனுக்குக்கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா - செட்டிகுளம், முதலியார்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற 2

# புலனாய்வாளர்களைப் பயன்படுத்தி ஆசிரியரை அச்சுறுத்துவதை நிறுத்து!

## அரசைக் கண்டிக்கின்றார் சுமந்திரன் எம்.பி.



(ந.லோகதயாளன்)

அதிபர்கள், ஆசிரியர்களின் நியாயமான போராட்டத்தைப் புலனாய்வாளர்களைக்கொண்டு அரசு அச்சுறுத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த மோசமான செயலை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 2

இலங்கைக் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்து

## காணாமல்போன மீனவனை மீட்டுத்தரக் கோரி தமிழக மீனவர்கள் வீதியில் அமர்ந்து போராட்டம்



(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்ட இந்தியப் படகில் இருந்து காணாமல்போன மீனவனை மீட்டுத்தரக் கோரியும், கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இரு மீனவர்களையும் விடுவிக்கக் கோரியும் தமிழக 2

## அதிகாரத்தின் பெயரால் ஆசிரியர்களையும் அரச ஊழியர்களையும் அவமதிக்காதீர்கள்!

### வடக்கின் முன்னாள் கல்வி அமைச்சர் காட்டம்




கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி திறக்கவுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் வராத பட்சத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களைக் கொண்டு பாடசாலைகளை நடத்துவேன் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார் என்று இன்று ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. இதனைப் பார்த்து வருத்தமடைகின்றேன். அதிகாரத்தின் பெயரால் ஆசிரியர்களையும் அரச ஊழியர்களையும் அவமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வாறு வடக்கு மாகாணத்தின் முன்னாள் கல்வி அமைச்சரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை 2

## தங்கக் கட்டிகளுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தங்கக் கட்டிகளை கட்டு நாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியில் எடுத்துச் செல்ல முயற்சித்த போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் விமான நிலைய சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடுபவர் என்றும் சுங்கப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் விமான நிலையத்திலிருந்து தங்கக் கட்டிகளைத் தனது ஆடைக்குள் மறைத்து எடுத்துச் செல்ல முயற்சித்தபோது சந்தேகத்தின் அடிப்படையில் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் அவர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே இந்தத் தங்கக் கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று சுங்கப் பிரிவின் பிரதிப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சுதத் சில்வா தெரிவித்துள்ளார்.

## நிமலராஜனின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம் கச்சேரியடிப் பகுதியில் உள்ள தனது வீட்டில் ஊடகங்களுக்குச் செய்தி எழுதிக்கொண்டிருந்த ஊடகவியலாளர் ம.நிமலராஜன், ஆயுததாரிகளால் துப்பாக்கியால் சுட்டும், குண்டு வீசியும் படுகொலை செய்யப்பட்டார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் நிமலராஜனின் உருவப்படத்துக்கு யாழ். மாநகர சபை மேயர் வி.மணிவண்ணனும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஷும் இணைந்து மலர் மாலை அணிவித்தனர்.

அதையடுத்து யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் ஜெயசீலன் நினைவுச்சுடரை ஏற்றியதுடன் ஊடகவியலாளர்கள் பலரும் மலரஞ்சலி செலுத்தினர்.

## காணாமல்போன ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்கள் வீதியில் அமர்ந்து இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோட்டைப்பட்டினத்தின் கிழக்கு கடற்கரைச் சாலையில் இந்த மறியல் போராட்டத்தில் தமிழக மீனவர்கள் ஈடுபட்டனர்.

மூழ்கடிக்கப்பட்ட இந்தியப் படகில் பயணித்த ராஜ்கீரன் ராசு என்பவரை உயிருடன் மீட்டுத் தருமாறு இதன்போது கோஷம் எழுப்பப்பட்டது.

சுமார் இரண்டு மணிநேரம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## அதிகாரத்தின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் துணைச் செயலாளருமான கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

அதிபர்கள், ஆசிரியர்கள் தமது சம்பள முரண்பாட்டுக்கான தீர்வைக் கோரி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டத்தின் நியாயங்களை அரசும் ஏற்றுக்கொண்டு தீர்வு வழங்குவதாகக் கூறியுள்ளது. எனினும், அரசின் திட்டவட்டமான பொறுப்புக்கூறல் இன்மை காரணமாக வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்கின்றது. இந்நிலையில், மத்திய கல்வி அமைச்சு 200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலைகளை எதிர்வரும் 21ஆம் திகதி மீண்டும் திறப்பதற்கு தீர்மானித்துள்ளது. எனினும், இந்தப் போராட்டத்துக்கு முடிவு காணாமல் பாடசாலைகள் திறக்கப்படக்கூடாது என அதிபர், ஆசிரியர் சங்கங்கள் கோரி வருகின்றன.

இந்நிலையில், இந்தப் பிரச்சினையானது சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களும் மத்திய கல்வி அமைச்சரும் இணைந்து தீர்மானித்து செயற்படுத்த வேண்டிய விடயமாகும். அதிபர், ஆசிரியர்களின் கோரிக்கையைக் கருத்தில் எடுக்காமல் பாடசாலை ஆரம்பிக்கின்ற தீர்மானத்தை ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்துவதாயின், அவை மாகாணக் கல்வி அமைச்சின் ஊடாக செயற்படுத்த வேண்டிய விடயங்களாகும்.

அதிபர், ஆசிரியர்களின் போராட்டங்கள் பற்றி மக்கள் அனைவரும் அறிவர். மேலும், கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக பெற்றோர் முதல் நாளே தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப விரும்ப மாட்டார்கள். மாணவர் வரவு படிப்படியான ஒன்றாகவே அமையும். நிலைமை இவ்வாறிருக்க, எதிர்வரும் 21ஆம் திகதி வருகின்ற மாணவர்களை வரவேற்பதற்கு ஆசிரியர்கள் வராவிட்டால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அனுப்பி ஆசிரியர்களுக்குப் பதிலாக பாடசாலையை நடத்துவேன் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் விடுத்திருக்கும் அறிக்கையானது அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளிக்கின்றது. காரணம் 21ஆம் திகதியும் போராட்டம் தொடருமானால் அடுத்த நடவடிக்கையைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மாகாண ஆளுநருக்கும், மாகாண கல்வி அமைச்சுக்குமே உரியது. ஆகவே, கிளிநொச்சி மாவட்ட செயலாளரின் அறிக்கையானது அவர் தனது அதிகார வரம்புக்கு அப்பால் செல்கின்றாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் தற்காலிகமாக ஆசிரியர்களாகப் பயன்படுத்துவேன் என அவர் கூறியிருப்பதானது, ஒருபுறம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை வேலையின்றி சம்பளம் எடுக்கின்ற அலுவலர்களாகச் சிறுமைப்படுத்துகின்ற செயற்பாடாக அமைவதுடன் மறுபுறம் யார் வேண்டுமானாலும் ஆசிரியர் பணியைச் செய்யலாம் என்ற தோரணை வெளிப்படுவதானது ஆசிரியர் தொழிலையும் சிறுமைப்படுத்துவதாக அமைகின்றது.

இவற்றுக்கு மேலாக மாவட்ட செயலரின் முடிவானது ஆசிரியர்களையும் நிர்வாக உத்தியோகத்தர்களான பிரதேச செயலர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் மோத விடுகின்ற தவறான அணுகுமுறை என்பதை கற்றறிந்த அனுபவமிக்க மாவட்ட செயலாளர் புரிந்துகொள்ளத் தவறியமை கவலையளிக்கின்றது - என்றுள்ளது.

## புலனாய்வாளர்களை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றிரவு இலங்கைக் கடலில் உயிர்நீத்த இந்திய மீனவர் ராஜ்கீரனின் உறவுகளுக்கு எமது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு வன்முறையற்ற வகையிலேயே தீர்வைக்காண நாம் முயற்சிக்கின்றோம்.

மீன்பிடி அமைச்சர் வன்முறையைப் பயன்படுத்தி இந்திய மீனவர்களை இழுத்து வருமாறு கோரியிருந்தார். ஆனால், நாம் கடலில் இறங்கிப் போராடியபோதும் சட்டத்தை அமுல்படுத்துமாறே கோரினோம்.

அரசு சட்டத்தைத் தெளிவாக நடைமுறைப்படுத்தினால் இவ்வாறான உயிர்ச் சேதங்களையும் தடுக்கலாம்.

இழுவை மடி மீன்பிடித் தடையானது இரு நாட்டு அரசுகளும் இணங்கிய விடயம். உள்ளூர் ட்ரோலர் தொழில் செய்யும் குருநகர் மீனவர்கள் 6 வருடங்களுக்கு முன்பு என்னோடு பேசியபோது 6 மாத கால அவகாசமே கோரினர். இதே போன்று இந்திய மீனவ அமைப்புக்களுக்கும் இது பாதிப்பு என்று தெரியும். ஆனாலும் அனுமதியுங்கள் என்கின்றனர். எனவே, இதனை முழுமையாக தடை செய்யுமாறே கோருகின்றோம்.

இதேநேரம் எம்மால் கடலில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தைச் சிலர் இந்தியாவுக்கு எதிரான போராட்டமாகக் காட்டி போராட்டத்தை வலுவிழக்கச் செய்ய முயற்சிக்கின்றனர். உண்மையில் இழுவை மடி மீன்பிடி முறைமையைத் தடுக்க வேண்டும் என்பதில் இந்திய அரசும் இணங்கியமையால் இது இந்தியாவுக்கு எதிரான போராட்டம் அல்ல.

இதேவேளை, அதிபர்கள், ஆசிரியர்களின் போராட்டத்தில் புலனாய்வாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு அச்சுறுத்தப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்களை அரசு தனது ஏவல் நாய்களைப் பயன்படுத்தி அச்சுறுத்துகின்றது. தொழிற்சங்கப் போராட்டமானது அவர்களின் உரிமை. எனவே, அதிபர்கள், ஆசிரியர்களின் போராட்டம் நியாயமானவை. அவர்களின் போராட்டத்துக்கு எமது ஆதரவை நாம் வழங்குவோம்; நாம் துணை நிற்போம் - என்றார்.

## மதுப் போத்தல்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னாலை சந்தியில் உள்ள கடற்படையினரின் சோதனைச் சாவடியில் வைத்து அவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட மதுபானங்கள் 250 மில்லீற்றர் போத்தல் அளவு கொண்டவை எனவும், அவற்றில் 750 போத்தல்கள் உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட மதுபானங்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## 26 பேர்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 60ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 பிரதேசங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி 265 வாகனங்களில் பயணித்த 469 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## சம்பந்தனை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது சமகால விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டன.

## உயிரிழந்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுவன் ஒருவர் மரணமடைந்திருந்தார்.

சிறுவன் பயணித்த மோட்டார் சைக்கிள் பாரவூர்தியுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

குறித்த சிறுவனின் சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மூக்குடைபட்ட அரசு

விளைவுகள், விபரீதங்களைச் சிந்திக்காமல், அசட்டுத் துணிச்சலில், அரசியல் முடிவுகளை எடுத்த கோட்டாபய ஆட்சிபீடம், இப்போது செய்வதறியாது தவிக்கின்றது.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பதுபோல அசேதன இரசாயன உரங்களுக்கு முழு அளவில் தடை – அதுவும் உடனடியாக நடைமுறைக்கு– என்ற அறிவிப்பை விட்டேத்தியாக விடுத்த அரசு இப்போது முழுசுகின்றது. ஆற்றில் அள்ளுப்பட்டு போகின்றவன் ம்ஜ்தவை என்று நினைத்து கரடியை கட்டிப்பிடித்த கதையாகி விட்டது அரசின் இந்த அறிவிப்பு. அரசுத் தலைமை தான் விரும்பினாலும் அந்தக் கெடுபிடி முடிவிலிருந்து விலகிவிட முடியாத அரசியல் சவாலாகி விட்டது விவகாரம்.

அண்மையில்புதிதாகவிவசாயஅமைச்சின்செயலாளராக பதவி ஏற்றிருக்கும் பேராசிரியர் உடித் ஜெயசிங்க தவறு நடந்ததை ஒப்புக் கொள்கின்றார். ஆனால் அரசோ, ஜனாதிபதியோ, துறைசார்ந்த அமைச்சரோ அதற்குக் காரணம் அல்லர், அதிகாரமட்ட செயற்பாடுகளே காரணம் என்று சமாளிக்கவும் விழைகின்றார்.

திடீரென அசேதன இரசாயன உரங்களுக்குத் தடை என்ற வர்த்தமானி அறிவிப்பு தொடர்பில் விவசாயிகள் சீற்றமுற்றுள்ளனர். அதற்கு அவர் விவசாயிகள் மீது குறை கூறவில்லை. இரசாயன உரங்களை விவசாயிகளின் வீட்டு வாசல்படி வரை எடுத்துச் சென்று ஒப்படைத்தது அரசின் நிர்வாகம்தான், பல சமயங்களில் அவற்றின் பாவனையை அதிகப்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்காக இரசாயன உரத்தை பெருமளவு மானிய அடிப்படையில், இலவசம் போல, விநியோகித்ததும் அரசுதான், அப்படியான அரசு இந்த உரப் பாவனையைத் தடை செய்ய முன்னர் மாற்று ஏற்பாடுகளை – மாற்றீடுகளை – சரியாக முன்வைத்திருக்க வேண்டும் என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார்.

சாகுபடி பயிரிப் தகுந்த விளைச்சல் பெற வேண்டுமானால் பயிருக்கு ஊட்டச்சத்து அவசியம். நமது நாட்டைப் பொறுத்தவரை ஊட்டச்சத்து என்பது பசளைதான்; உரம்தான். நெல் சாகுபடி என்றால் யூறியா .அதேபோல வேறு சில ரகங்கள். இந்தச் சிந்தனைச் செயல்பாட்டில் தான் நமது விவசாயிகள் உள்ளனர் என்கிறார் அவர்.

நச்சுத்தன்மையுள்ள, தரம் குறைந்த, செயற்கை உரங்களுக்குப் பதிலாக நச்சற்ற, சூழலியல் தோழமையுள்ள, இயற்கையான, உயர் தலைமுறை உரங்களை சேதனப் பசளைகளாகப் பயன்படுத்துவதுதான் ஜனாதிபதியின் திட்டம் எனக் கூறும் அவர், சேதன விவசாயம் என்ற பெயரில் அது ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெற்றுள்ளது என்றும் சுட்டுகிறார். எனினும் அரச உயர் மட்டத்தில் இது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில்தான் தவறு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறுகின்றார். இரசாயன உரங்களின் பாவனைக்கு தடை என்ற வாசகத்தில் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்தமைதான் குழப்பத்திற்குக் காரணம், அதற்கு ஜனாதிபதியோ, அமைச்சரோ பொறுப்பல்லர், அரசாங்க உயர்மட்டத்தின் முடிவை நடைமுறைப்படுத்தும் போக்கில்தான் தவறு ஏற்பட்டுள்ளது, சூழலியல் தோழமையுள்ள தாவர உயிரூட்டங்களின் இறக்குமதிக்கு வழிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலாக அது வெளிவந்திருக்க வேண்டும் என்றும் அவர் விளக்குகின்றார்.

சேதன விவசாயத்தின் மெருகு குறித்து அதிகப்பிரசங்கிதனமான திட்டமிடல் இடம் பெற்றுவிட்டது. எப்படியாயினும் நேர்ந்த தவறைத் திருத்த வேண்டும். இப்போது முப்பது வீதமான தேவைக்கே சேதனப் பசளைகள் எம்மிடம் உள்ளன, எஞ்சியவற்றுக்கு இந்தியாவிலிருந்து தரமான உரத்தை இறக்குமதி செய்து, நமது விவசாயிகளுக்கு விரைந்து வழங்கத் திட்டமிட்டுள்ளோம் என்றும் சமாளிக்கிறார் அவர்.

ஆக, ஒரு விடயம் தெளிவு. அரசு அவசரப்பட்டுவிட்டது. விளைவுகள், விபரீதங்கள் குறித்து சிந்திக்கவே இல்லை. எதையும் மக்கள் மீது திணித்து விடலாம் என்ற மமதையில் நடந்துகொண்டு, நன்றாக மூக்குடைபட்டு விட்டது. இப்போது உணர்ந்து கொண்டு – நிலைமையைப் புரிந்து கொண்டு – சமாளிக்க முயல்கின்றது. விவசாய அமைச்சின் செயலாளரின் பேட்டி அதைத்தான் உறுதிப்படுத்துகின்றது.

# 25 சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாள் ஒன்றுக்குப் பதிவாகின்றன!

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும அதிர்ச்சித் தகவல்

இலங்கையில் நாளாந்தம் 25 சிறுவர்கள் பல்வேறு வகையிலான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். இதன்படி, ஒரு மணி நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பேருவளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரையிலான ஆறு மாதங்களில், அதாவது 180 நாள்களில் நாட்டில் 4 ஆயிரத்து 743 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனை ஆராய்ந்த போது பல்வேறு விவரங்கள் வெளியாகியுள்ளன. துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் சிறுவர்கள் 21 சதவீதம் பேர் ஐந்து வயதுக்குட்பட்டவர்கள்.



17 சதவீத சிறுவர்கள் 5 முதல் 1( வயதுக்குட்பட்டவர்கள். 38 சதவீத சிறுவர்க( 11 முதல் 15 வயதுக்குட்பட்டவர்கள். அதாவது 15 வயதிற்குட்பட்ட 75 சதவீத சிறுவர்கள் இந் நிலைக்கு ஆளாகின்றனர்.

180 நாள்கள் அல்லது ஆறு மாதங்களில் 4 ஆயிரத்து 743 முறைகேடுகள் நட( கும்போது, ஒரு நாளைக்கு 25 இற்கு( மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த சிறுவர்கள் அவர்களின் தந்தை( தாய்மார்கள், மதகுருமார்கள், தாத்தாக்கள் ஆசிரியர்கள் உள்ளிட்டவர்களால் கூ( துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர். - என( அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஆராய்வு



முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளின் பிரதேச செயலாளர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனின் தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) காலை 10.30 மணியளவில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சுரேன் ராகவனூடாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியினூடாக மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் இங்குள்ள மூலப்பொருள்களைப் பயன்படுத்தி இங்குள்ளவர்களுக்கான( வேலை வாய்ப்புகளை உருவாக்கும் தொழி( முயற்சிகள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார்.

மேலும் வட்டுவாகல், கொக்கிளாய் பால( களை அமைத்தல் மற்றும் மாவட்டத்தி( சுற்றுலாத் துறை அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

விவசாயிகளால் கலாநிதி சுரேன் ராக( னிடம் முன்வைக்கப்பட்ட மேய்ச்சல் தரை( தொடர்பான பிரச்சினை மற்றும் சமூகத்( லுள்ள பொதுவான பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதி( அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மாவட்( செயலக திட்டமிடல் பணிப்பாளர், பிரதே( செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினரி( பிரத்தியேக உத்தியோகத்தர்கள் ஆகியோ( கலந்துகொண்டனர்.

# முல்லை கிணற்றிற்குள் வீழ்ந்த காட்டுயானை



முல்லைத்தீவு -ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட ஒதியமலை கிராமத்தில் விவசாயக் கிணற்றில் வீழ்ந்த காட்டு யானை ஒன்று வன ஜீவராசிகள் திணைக் களத்தால் மீட்கப்பட்டுள்ளது.

ஒதியமலை பகுதியில் 20 அடி ஆழம் கொண்ட விவசாயக் கிணற்றில் காட்டுயானை விழுந்து கிடப்பதைக் கண்ட விவசாயி கிராம சேவையாளருக்குத் தகவல் கொடுத்துள் ளார்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குக் காலை 10 மணிக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கனரக இயந்திரங்கள் கொண்டு யானையைக் கிணற்றிலிருந்து மீட்டுள்ளார்கள். அலியன் எனப்படும் தனியானையே( இவ்வாறு கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளது.

ஒதியமலை கிராமத்தில் யானைவே( இல்லாத நிலையில் நாளாந்தம் காட்( யானைகளால் விவசாய விளைநிலங்கள் அழிக்கப்படுகின்றன என மக்கள் கவலை( தெரிவித்துள்ளார்கள்.

# மியன்மாரில் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் விடுவிப்பு!



மியன்மாரில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய பின், நடந்த போராட்டங்களின்போது கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கான அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாங்கோனின் இன்சீன் சிறையில் இருந்த அரசியல் கைதிகளை மியன்மாரின் ஆட்சிக்குழு விடுவித்துள்ளது என்று உள்ளூர் ஊடகங்களை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் நடந்த ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடியதற்காக கைது செய்யப்பட்ட 5,600க்கும் மேற்பட்டவர்களை விடுவிப்பதற்கு திங்கள் கிழமை ஆட்சிக்குழு அறிவித்ததைத் தொடர்ந்து இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட கைதிகள் நாட்டிற்கு எதிராக எந்த வன்முறைச் செயல்களையும் செய்ய மாட்டோம் என்று உறுதிமொழி அளித்து கையெழுத்திட வேண்டும் என்று ஆட்சிக்குழு மேலும் கூறியுள்ளது.

ஆட்சிமாற்றத்திற்குப் பிறகு, மியன்மாரின் பாதுகாப்புப் படைகள் 9,000க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்துள்ளது. அவர்களில் 7,355பேர் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அரசியல் கைதிகளுக்கான இலாப நோக்கற்ற குழு உதவி சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை இராணுவ ஆட்சிக்கு எதிராக நடந்த போராட்டங்களில் குறைந்தது 1,178பேர் கொல்லப்பட்டனர் என்றும் 7,355பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் அரசியல் கைதிகளின் உதவிக்கான அமைப்பு கூறுகிறது. தென்கிழக்கு ஆசிய நாடான மியன்மாரில், கடந்த பெப்ரவரி முதலாம் திகதி ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை கவிழ்த்துவிட்டு ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப் பற்றியது.

தேர்தல் முறைகேடு காரணமாக ஆட்சியை கவிழ்த்ததாக விளக்கம் அளித்த இராணுவம், நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மைன்ட் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களை கைது செய்து வீட்டுக் காவலில் வைத்தது.

இதனைத்தொடர்ந்து இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், ஆங் சான் சூகிக்கு ஆதரவாகவும் கிளர்ச்சிக் குழுவினர் மற்றும் பொதுமக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

# ஆப்கானிஸ்தானில் போலியோ மருந்து முகாம்களை நடத்த ஐ.நா. தீர்மானம்

ஆப்கானிஸ்தானில் நாடு முழுவதும் போலியோ தடுப்பு மருந்து முகாம்களை நடத்த ஐக்கிய நாடுகள் மன்றம் தீர்மானித்துள்ள நிலையில், அதற்கு தலிபான்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பெண் ஊழியர்கள் இந்த போலியோ சொட்டு மருந்து முகாமில் பங்கெடுக்கவும், இந்த முகாம் நடத்துவதற்கு போதிய பாதுகாப்பு வழங்கவும் தலிபான்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.



எதிர்வரும் நவம்பர் மாத தொடக்கத்தில் இந்த போலியோ சொட்டுமருந்து முகாம் நடத்தப்படவுள்ளதாக ஐநாவின் குழந்தைகள் அமைப்பான யுனிசெவ் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள சில பகுதிகளில் இருக்கும் சுமார் 33 லட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் தடுப்பூசி முகாமில் பயன் பெறுவதற்கான வழி இல்லாமல் இருந்தனர்.

ஆனால், தற்போது நவம்பர் 8ஆம் திகதி தொடங்க உள்ள இந்த போலியோ முகாம் மூலம் ஐந்து வயதுக்கும் குறைவான சுமார் ஒரு கோடி குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து வழங்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது. சுமார் மூன்றாண்டு காலத்துக்குப் பிறகு ஆப்கானிஸ்தானில் இருக்கும் எல்லா குழந்தைகளும் பலனடையும் தடுப்பு மருந்து முகாமாக இது இருக்கும் என்று உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனிசெவ் ஆகியவை கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் தலிபான்கள், இஸ்லாமியர்கள் குழந்தை பெற்றுக் கொள்ளும் திறனை இழக்க செய்வதற்காக மேற்கத்திய நாடுகள் செய்யும் சதியே தடுப்பு மருந்து என கூறிவந்தமை குறிப்பிடத்தக்கது.

# கண்டம் பாயும் ஏவுகணையை பரிசோதித்தது வடகொரியா

ஜப்பான் கடற்கரையில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வடகொரியா ஏவியுள்ளதாக தென்கொரியா மற்றும் ஜப்பானின் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். வடகொரியாவின் கிழக்கில் உள்ள சின்போ துறைமுகத்தில் இருந்து ஒரு ஏவுகணை ஏவப்பட்டதாக தென்கொரியாவின் கூட்டுத் தலைமை அதிகாரிகள் கூறியுள்ளனர். குறித்த ஏவுகணை ஜப்பான் கடல் என அழைக்கப்படும் கிழக்கு கடலில் தரையிறங்கியது என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்நிலையில் இரண்டு ஏவுகணைகள் வீசப்பட்டன எனவும், இந்த நடவடிக்கை மிகவும் வருந்தத்தக்கது என ஜப்பானின் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சமீபத்திய வாரங்களில், வடகொரியா ஹைப்பர்சொனிக் மற்றும் நீண்ட தூர கப்பல் ஏவுகணைகள் மற்றும் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் என கூறிக்கொள்ளும் சோதனைகளில் தீவிரமாக ஈடுபட்டது. இந்த சோதனைகளில் சில கடுமையான சர்வதேச தடைகளை மீறுகின்ற நிலையில் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுத சோதனையை நடத்துவதற்கு வடகொரியாவுக்கு ஐக்கிய நாடுகள் சபையால் தடை விதிக்கப்பட்டது.

# தடைப்பட்டுள்ள அணுசக்திப் பேச்சில் கலந்துகொள்ளவிருக்கிறதாம் ஈரான்

தடைப்பட்டுள்ள அணுசக்திப் பேச்சில் மீண்டும் கலந்துகொள்ளவிருப்பதாக, ஈரான் அறிவித்துள்ளது.



வல்லரசு நாடுகளுடன் நின்றுபோயுள்ள அணுசக்திப் பேச்சில் வரும் 21 ஆம் திகதி மீண்டும் கலந்து கொள்ளவிருப்பதாக ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹுசைன் அமீர்- அப்துல்லாஹியான் அறிவித்துள்ளார்.

ஈரான் அணுசக்தி பேச்சுக்கான தலைமை ஐரோப்பிய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் என்ரிக் மோரா, புதிய நிர்வாகம் பதவியேற்ற பிறகு முதல் முறையாக ஈரான் துணை வெளியுறவு அமைச்சர் அலி பகேரி கானியை சந்திக்க தெஹ்ரானுக்குச் சென்றார். இந்த நிலையில் இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜுன் மாதத்தில் ஈரானிய ஜனாதிபதி பதவிக்கு கடும்போக்கு மதகுரு இப்ராஹிம் ரைசி தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து அணுசக்தி பேச்சுகள் நிறுத்தப்பட்டன. ஈரான் மீண்டும் விரைவில் பேச்சினைத் தொடங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தது, ஆனால் ஒரு திகதிக்கு உறுதியளிக்கத் தவறியது.

ஈரான் அதன் அணுசக்தி திட்டத்தை சமீபத்திய மாதங்களில் கணிசமாக துரிதப்படுத்தியது. யுரேனியத்தை அதிக அளவில் செறிவூட்டுகிறது மற்றும் போதுமான அளவு ஆயுதங்கள் கொண்ட யுரேனியத்தை குவிக்கின்றது. சில மாதங்களில் அணு குண்டை உருவாக்க முடியும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.



Hindustan Times
Monday, Oct 18, 2021 | New Delhi 22°C

INDIA NEWS

**Former PM Manmohan Singh's health condition improving**

"His condition is better and progressing well. He is responding to treatment and that is a good sign. He is being taken care of by a team of specialists," said a senior staff member from the hospital, on condition of anonymity

Former prime minister Manmohan Singh. (PTI)

Updated on Oct 16, 2021 02:33 AM IST

By HT Correspondent, Hindustan Times, New Delhi

# மன்மோகன் சிங் மரணச்செய்தி வதந்தி பரப்பவேண்டாமென காங்கிரஸ் கோரிக்கை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் காலமானார் என்று சமூகவலைத்தளங்களில் பரவும் தகவல் தவறானது என்று டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

89 வயதான இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உடல் நலக் குறைவு காரணமாக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் அவருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதையடுத்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. அவர் அபாயக் கட்டத்தைத் தாண்டிவிட்டார் எனவும் அவரது உடல் நிலை சீராக உள்ளது என்றும் டெல்லி எய்ம்ஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் மன்மோகன் சிங் கடந்த ஒக்ரோபர் 16 ஆம் திகதி இறந்துவிட்டார் என்று சமூக வலைத்தளங்களில் கண்ணீர் அஞ்சலிப் பதிவுகள் பகிரப்பட்டன. ஜார்கண்ட் மாநில அமைச்சர் ஒருவர் மன்மோகன் சிங் மரணமடைந்துவிட்டார் என்று அவருக்கு இரங்கல் தெரிவித்தார் எனவும் பின்னர் தன்னுடைய தவறைத் திருத்திக்கொண்டு மன்னிப்புக் கேட்டார் எனவும் அறியக்கிடைத்துள்ளது.

சமூக ஊடகங்களில் மன்மோகன் சிங் உடல்நிலை பற்றி வதந்தி பரவவே, தெலங்கானா மாநில காங்கிரஸ் கட்சி தன்னுடைய அதிகாரப்பூர்வ டுவிட்டர் தளத்தில் மன்மோகன் சிங் உடல் நிலை பற்றி வதந்தி பரப்ப வேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

# தொலைக்காட்சித் தொடர் பார்ப்பதை விட்டு பெண்கள் புத்தகங்களை வாசிக்க வேண்டும்

## தமிழக அமைச்சர் கோரிக்கை



தொலைக்காட்சித் தொடர்கள் பார்க்கும் நேரத்தில் புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்துக்கு பெண்கள் மாற வேண்டும் என தமிழக வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் குளிர் சாதன வசதியுடன் அமைக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர் சிறுமியர் நூலகத்தை தமிழக அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் திறந்து வைத்தனர். அந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் தங்கம் தென்னரசு, இந்தியாவி லேயே அனைத்து ஊராட்சிகளிலும் நூலகம் அமைக்கப்பட்டுள்ள பெருமை கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்று சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் பேசுகையில், பெண்கள் கல்வியறிவு பெற வேண்டுமென்ற பெரியாரின் கனவை அறிஞர் அண்ணாவும் கலைஞர் கருணாநிதியும் நிறைவேற்றினார் என பெருமையுடன் குறிப்பிட்டார். தொலைக்காட்சித் தொடர்களில் நல்ல விடயங்கள் சொல்லப்படுவதில்லை என்றும் அவற்றைப் பார்ப்பதற்குப் பதிலாகப் புத்தங்களை பெண்கள் வாசிக்கவேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

# முன்னாள் அமைச்சரின் இடங்களில் சோதனை தமிழகத்தில் வருமான வரித்துறையினர் அதிரடி



தமிழகத்தின் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சரான சி.விஜயபாஸ்கர் மற்றும் அவருடைய நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தொழில் பங்குதாரர்களின் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறை சார்பில் சோதனை நடத்தப்பட்டது. விஜயபாஸ்கரின் குடும்ப உறுப்பினர்கள் நிர்வகிக்கும் அறக்கட்டளை மூலமாக நடத்தப்பட்டு வரும் கல்வி நிறுவனங்களிலும் சோதனைகள் இடம்பெற்றுள்ளன. புதுக்கோட்டையில் 32, திருச்சியில் 4, கோயம்புத்தூர் 2, செங்கல்பட்டில் 2, சென்னையில் 8 என மொத்தம் 50 இடங்களில்சோதனைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சோதனைகளில் இதுவரை கணக்குக் காட்டப்படாத பணம், தங்க நகைகள், கனரக வாகனங்களின் பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் சொத்துப் பரிவரித்தனை தொடர்பான ஆவணங்கள் கண்டறியப்பட்டுள்ளன என தமிழ்நாடு இலஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் அறிக்கை வெளியாகியுள்ளது. அந்த அறிக்கையில், இந்தச் சோதனையில் கணினி ஹார்ட் டிஸ்குகள் உள்ளிட்ட முக்கியமான தகவல் ஆதாரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பான முதல் தகவல் அறிக்கையில், '2013-21 வரை, அமைச்சராக இருந்தபோது சட்டவிரோதமாக பல கோடி ரூபா சொத்துக்கள் விஜயபாஸ்கர் பெயரிலும், அவருடைய மனைவி பெயரிலும் சேர்க்கப்பட்டுள்ளன எனவும், அவரது குடும்பத்தினர் பெயர்களில் ராசி புளூ மெட்டல்ஸ், கிறீன் லாண்ட் ஹை பிரமோட்டர்ஸ், ஐரிஸ் எக்கோ பவர் வென்ச்சர், ராசி எண்டர்பிரைசஸ், அன்யா எண்டர்பிரைசஸ் போன்ற நிறுவனப் பெயர்களில் ஏராளம் தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளதென்றும், 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது விஜயபாஸ்கரின் சொத்து மதிப்பு ரூபா. 6.42 கோடியாக கணக்குக் காட்டப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் பல மடங்காக சொத்துகள் அதிகரித்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 சட்டமன்றத் தேர்தலின்போது அவரின் சொத்து மதிப்பு ரூபா 58.64 கோடியாக என உயர்ந்துள்ளதாகவும், அவரின் மொத்த வருமானம் 57.77 கோடியாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், வருமானத்துக்கு அதிகமாக அவர் சேர்த்த சொத்தின் மதிப்பு, 27.22 கோடியாகக் கண்டறியப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# லக்கிம்பூர் வன்முறைக்கு நீதியான விசாரணைகோரி இந்தியாவில் விவசாயிகள் ரயில் மறியல் போராட்டம்



கடந்த 3 ஆம் திகதி இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தின் லக்கிம்பூரில் போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது வாகனத்தை ஏற்றியமை, அதைத்தொடர்ந்த வன்முறைகளில் பத்திரிகையாளர் ஒருவர் உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்தனர். இந்த விவகாரத்தில் உத்தரப்பிரதேச மாநில பொலிஸார், மத்திய இணையமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஸ் மிஸ்ரா உள்பட 13 பேர் மீது வழக்குப் பதிவுசெய்து ஆஷிஸ் மிஸ்ராவைக் கைது செய்துள்ளனர்.

இந்த வழக்கில் நியாயமான விசாரணை நடக்க மத்திய இணையமைச்சர் அஜய் மிஸ்ரா பதவி விலக வேண்டும் என பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வந்தனர். இந்த நிலையில், மத்திய இணையமைச்சரவை பதவி விலகக்கோரி இந்தியாவின் பல இடங்களிலும் நேற்று ரயில் மறியல் போராட்டத்தில் விவசாயிகள் சங்கத்தினர் ஈடுபட்டனர். பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேச மாநிலங்களில் ரயில் தண்டவாளங்களில் அமர்ந்து விவசாயிகள் போராட்டம் நடத்தியமையால் ரயில் சேவை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

விவசாயிகளின் போராட்டத்தை முன்னிட்டு இந்தியா முழுவதும் ரயில் நிலையங்களில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. ஹரியானாவில் உள்ள ரயில் நிலையங்களில் பாதுகாப்புப் பணியில் விரைவு அதிரடிப் படையினர் நிறுத்தப்பட்டனர். தடையை மீறி போராட்டம் நடத்திய விவசாயிகள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உத்தரப்பிரதேசத்தில் ஏற்கனவே 144 தடை உத்தரவு அமுலில் இருப்பதால், விவசாயிகளின் ரயில் மறியல் போராட்டத்தை முன்னிட்டு அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. போராட்டத்தில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தடை உத்தரவுகளை மீறுபவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்படும் என்றும் அம்மாநில பொலிஸார் எச்சரித்திருந்தனர். அதையும் மீறிப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பொதுமக்களினுடைய பணம் பலவந்தமாகப் பறிக்கப்படுகிறது

## ராகுல் குற்றச்சாட்டு



பெற்றோல் விலை விடயத்தில் பொதுமக்களின் பணம் பலவந்தமாகப் பறிக்கப்படுவதாக காங்கிரஸ் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

பெற்றோல் விலையானது விமானங்களுக்கான எரிபொருளைவிட அதிகமாக உள்ளது என்றும் குறித்த ஊடகச்செய்தியைச்சுட்டிக்காட்டியுள்ள ராகுல் காந்தி, இது தீவிரமான பிரச்சினை என்றும், தேர்தலுக்கு முன்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஹவாய் சப்பல் அணிபவர்கள் கூட விமானத்தில் பறக்கிறார்கள் என மத்திய அரசு கூறி வந்த நிலையில், சாலையில்கூட செல்ல முடியாத நிலையில் மக்கள் தற்போது இருக்கின்றனர் என காங்கிரஸ் பொதுச் செயலாளரான பிரியங்கா காந்தி கூறியிருக்கின்றமையும் சமூகவலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வருகிறது.

# தீர்வு கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் ஆசிரியர்கள் சங்கத்தின் செயலாளர் தெரிவிப்பு



அதிபர் ஆசிரியர் சங்க போராட்டம் இன்று 100 நாள்களை கடந்தும் அரசாங்கம் தீர்வு வழங்கவில்லை எனவே தீர்வு வழங்கும் வரை எமது போராட்டம் தொடரும் என வடக்கு கிழக்கு மாகாண இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கத்தின் செயலாளர் ஜீ.ருபேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கூளாவடியிலுள்ள அவரது வீட்டில் இன்று இடம்பெற்று ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் சரியான தீர்வினை பெற்றுத்தரும் வரை எங்களுடைய போராட்டம் தொடர்ந்து செல்லும் அதேவேளை இந்த போராட்டத்தை காட்டிக் கொடுக்கின்றவர்களுக்கு தெட்டதெளிவாக சொல்லுகின்றோம் உங்களைப்போன்று எமது போராட்டம் இடை நடுவில் கை விடமாட்டோம்

அவ்வாறே தொடர்ந்து அழுத்தங்களை கொடுக்கின்ற அரசாங்கத்திற்கு கூறிக்கொள் கின்றோம் அழுத்தங்களை கொடுக்காது இந்த ஆசிரியர்களுக்கு சரியான தீர்வை பெற்றுக் கொடுங்கள். நாட்டினுடைய நிலைமையினை கருத்தில் கொண்டு சுற்று அறிக்கையை கேட்டிருக்கின்றோம் முதலில் எங்களுடைய பிரச்சினையை ஏற்றுக் கொள்ளுங்கள். அதன் பின்னர் பாடசாலையை திறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள். எனவே அரசாங்கம் இந்த போராட்டத்தினை மேலும் மேலும் இழுத்தடிக்காது இதற்கான தீர்வுகளை வழங்கிபாடசாலை ஆரம்பித்து மாணவர்கள் இழந்த கல்வியை கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவே எங்கள் போராட்டம் தொடரும் என்றார்.

## கல்வித் திணைக்களத்தினால் இழந்த கல்வியை மீட்பதற்கான துரித செயற்பாடுகள் முன்னெடுப்பு

உலகெங்கும் பரவிக் காணப்படுகின்ற கொவிட் – 19 காரணமாக பாடசாலைகளில் கற்றல்– கற்பித்தல் செயற்பாடுகள் முறையாக இடம்பெறாமையினால் மாணவர்கள் தங்களது கல்வியினை இழந்திருக்கின்றனர். தற்போது நோயின் தாக்கம் காணப்படுகின்ற போதும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி பாடசாலைகள் மீண்டும் எதிர்வரும் 21.10.2021 இல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பிள்ளைகள் பாடசாலைக்கு மீண்டும் வரும்போது பல்வேறுபட்ட இயல்புகளையும், தன்மைகளையும் கொண்டுவருகைதரவுள்ளனர். இந் நிலையில் பிள்ளையினது அறிவு விருத்தியை மட்டுமன்றி, உடல் விருத்தி, உள விருத்தி, மனப்பாங்கு விருத்தி, ஆளுமை விருத்தி என்பவற்றுடன் சமூகவிருத்தியையும் மேம்படுத்துவது பிரதான பொறுப்பாகும். எனவே பிள்ளைகளது இயல்பான தன்மைகளை அறிந்து அவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரத்தக்கவாறு கற்றல்– கற்பித்தல் செயற்பாடுகளை நெறிப்படத்தவேண்டியதும், அவர்களது பல்வேறு நடத்தைக் கோலங்களைச் சீர்படச் செய்தலும் அனைவரினதும் துறைசார்ந்த பணியாகும்.

இந்த வகையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் வழிகாட்டல், ஆலோசனைக்கு அமைவாக கிழக்கு மாகாண ஆரம்பக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.பார்த்தீபனின் நெறிப்படுத்தலின் கீழ் கொவிட் – 19 காலகட்டத்தில் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் இழந்த கல்வியினை மீட்டல் தொடர்பான பரிகாரச் செயற் பாடுகள் மற்றும் மாணவர்களின் உளநலத்தினை மேம்படுத்தும் கையேடு தயாரித்தல் செயலமர்வு மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான் சிறீளீநு பயிற்சி நிலையத்தில்நேற்று நடைபெற்றது.



இக் கையேடு தயாரிக்கும் செயலமர்வில் உளநல விசேட வைத்திய நிபுணர் ம்ஷ.ரி. கடம்பநாதன், மற்றும் ஷ.கே.அருட்சோதி ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய பங்களிப்பினை ஆற்றியிருந்தமை விசேட அம்சமாகும். அத்துடன் யுனிசெவ் நிறுவனப் பிரதிநிதி அலாவுதீன் நிபால், மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆரம்பக் கல்வி, முறைசாராக் கல்வி, அழகியல், முன்பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், செயற்பட்டு மகிழ்வோம் வளவாளர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.



## வெருகல் பிரதேச விவசாயிகளுக்கு சேதன உரம் தயாரிக்கும் பயிற்சிகள்

சௌபாக்கியா தேசிய வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இயற்கை உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளின் கீழ் வன்னி ஹோப் ஆஸ்திரேலியா நிறுவனம் மற்றும் தமிழ் போரம் மலேசியா ஆகிய நிறுவனங்களின் நிதி அனுசரணையில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் வெருகல் பிரதேச விவசாயிகளுக்கு சேதன உரம் தயாரிக்கும் செய்முறை அடங்கிய பயிற்சிகள் நேற்று வெருகல் பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனியின் வழிகாட்டலின் கீழ் மாவடிச்சேணையில் மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ் தலைமையில் இடம்பெற்றன.

வெருகல் பிரதேசத்தில் உள்ள 30 விவசாயிகளுக்கு வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்க சேதன உரம் தயாரிக்கும் தொழிநுட்பரீதியான பயற்சிகளை நிலாவெளி மற்றும் வெருகல் பிரதேச கமநல சேவைகள் நிலைய போதனாசிரியர்களான வாஜித் மற்றும் லுஜிதன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கான பயிற்சிகளை வழங்கி வைத்தனர்.

இயற்கையாக கிடைக்கக்கூடியதும் உக்கக்கூடியதுமான வாழைத் தண்டு, வைக்கோல், வீட்டுக் கழிவுகள் கொண்டு விரைவாகவும், இலகுவாகவும் கூட்டெரு உற்பத்தி செய்யும் குவியல் முறையிலான சேதனஉரம் தயாரிக்கும்பயிற்சிகள் இதன்போதுவழங்கப்பட்டமையுடன் சேதன உரத்தின் பயன்பாடு அதன் முக்கியத்தவம் தொடர்பிலும் தெளிவூட்டல்களும் விவசாயிகளுக்கு இதன்போது வழங்கப்பட்டன. தொழிநுட்ப ரீதியாக தயாரிக்கப்பட்ட சேதன பசளைகள் அடங்கிய பொதிகள் விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## மட்டக்களப்பில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள மரப்பாலம் முள்ளிச்சேனை தோட்டம் ஒன்றின் வாடியில் அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் ஆண் ஒருவர் சடலமாக இன்று மீட்கப்பட்டுள்ளார் எனவும் இச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் உயிரிழந்தவரின் நண்பன் ஒருவரை கைது செய்துள்ளோம் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

மரப்பாலம் முள்ளிச்சேனையைச் சேர்ந்த 56 வயதுடைய கிருஸ்ணபிள்ளை நேசராசா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுமி ஹிஷாலினியின் வழக்கு; புதிய தகவல்கள் வெளியிடப்பட்டன

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் கொழும்பில் உள்ள வீட்டில் எரிகாயங்களுக்கு உள்ளாகி மர்மமான முறையில் உயிரிழந்த மலையகத் தமிழ் சிறுமி ஹிஷாலினி தொடர்பான வழக்கு விசாரணை பற்றிய புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த வகையில் இவ்விவ காரத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிராக விரைவில் வழக்குத்தாக்கல்செய்யப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் ரிஷாத் பதியுதீனின் மைத்துனர் ஹிஷாலினியை பலாத்காரம் செய்தமைக்கு இதுவரை எந்தவித ஆதாரமும் இல்லை. அதனால் அவருக்கு எதிராக பெரும்பாலும் வழக்கு தாக்கல் செய்யப்படாது என்று கூறப்படுகிறது.

அதேவேளை ஹிஷாலினி சுவரில் எழுதிய விடயம் மற்றும் அவரது கையெழுத்து அடங்கிய கொப்பி என்பன தற்போது விசாரணை மட்டத்தில் இருந்து வருகின்றன.

இந்த விசாரணை பற்றிய அறிக்கை இதுவரை மன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமீபியாவுடனான போட்டியில் இலங்கைக்கு இலகுவான வெற்றி!



ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் நேற்றைய தகுதிகாண் சுற்றுப்போட்டியொன்றில் இலங்கை அணி நமீபியா அணியை வென்றது.

இந்தப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய நமீபியா அணி, 19.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. கிரெய்க் வில்லியம்ஸ் 29 ஓட்டங்களையும் ஜெராட் எரஸ்மஸ் 20 ஓட்டங்களையும் சேர்த்தனர். இலங்கை அணியின் மகேஷ் தீக்ஷன 3 விக்கெட்டுக்களையும் லஹிரு குமார மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சம்மிக்க கருணாரத்ன, துஷ்மந்த சமீர இருவரும் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இலகுவான வெற்றி இலக்கைநோக்கிகளமிறங்கிய இலங்கை அணி, 13.3 ஓவர்களிலேயே 3 விக்கெட்டுகளை மட்டும் இழந்து வெற்றி பெற்றது. பானுக ராஜபக்ஷ ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும் அவிஷ்க பெனார்டோ ஆட்டமிழக்காது 30ஓட்டங்களையும்எடுத்தனர். நமீபியா அணியின் ரூபென் ட்ரம்பெல்மன், பெர்னாட் ஸ்கோல்டஸ் மற்றும் ஸ்மித் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் மஹேஷ் தீக்ஷன தெரிவு செய்யப்பட்டார். இந்த வெற்றியோடு இலங்கை அணி குழு ஏயில் 2 புள்ளிகளோடு முதலிடத்தைப் பிடித்துள்ளது. நாளை நடைபெறவுள்ள போட்டியில் இலங்கை அணி அயர்லாந்தை எதிர்கொள்ளவுள்ளது.

# மலிங்கவின் சாதனையை முறியடித்த பங்களாதேஷ் வீரர் சகிப் அல் ஹசன்



சர்வதேச ரி-20 கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றியலசித்மலிங்கவின்சாதனையை பங்களாதேஷ் வீரர் சகிப் அல் ஹசன் முறியடித்துள்ளார். அத்துடன், ரி-20 கிரிக்கெட் போட்டிகளில் 100க்கும் அதிகமான விக்கெட்டுக்கள் மற்றும் 1,000 இற்கும் அதிகமான ஓட்டங்கள் எடுத்த ஒரே வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றிருக்கிறார்.

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் தகுதிகாண் சுற்றின் பி குழுவுக்கான இரண்டாவது போட்டியில் பங்களாதேஷ் அணியை 6 ஓட்டங்களால் ஸ்கொட்லாந்து அணி வீழ்த்தியது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்துக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது. இந்தப் போட்டியில் பங்களாதேஷ் அணியின் நட்சத்திர வீரரான சகிப் அல் ஹசன் 4 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்து 2விக்கெட்டுக்களைக்கைப்பற்றினார்.

இதன்மூலம் ரி-20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர் என்ற லசித் மலிங்கவின் 107 விக்கெட் சாதனையை சகிப் அல் ஹசன் முறியடித்தார். இதுவரை மொத்தம் 89 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ள சகிப் அல் ஹசன், மொத்தம் 108 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். மலிங்க 107 விக்கெட்டுக்களுடன் இரண்டாவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

இந்த சாதனைப் பட்டியலில் நியூசிலாந்தின் டிம்சௌத்தி 3ஆவது இடத்திலும், பாகிஸ்தானின் சஹிட்அப்ரிடி 4 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தானின் ரஷிட் கான் 5ஆவது இடத்திலும் உள்ளனர்.

# யூ.ஈ.எவ்.ஏ. சம்பியன்ஷிப் இன்றைய நாள் போட்டியில் நெய்மர் விளையாடமாட்டார்



யூ.ஈ.எவ்.ஏ. சம்பியன்ஷிப் கால்பந்தாட்ட லீக் தொடரில் லெய்ப்ஸிக் அணிக்கு எதிராக இன்று நடைபெறவுள்ள போட்டியிலிருந்து நட்சத்திர வீரர் நெய்மர் விலகியுள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் யூ.ஈ.எவ்.ஏ சம்பியன்ஷிப் லீக் தொடரில், பரிஸ்-செயின்ட் ஜெர்மெய்ன் (பி.எஸ்.ஜி.) அணிக்காக நெய்மர் விளையாடி வருகிறார். இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக நெய்மர் இன்று நடைபெறவுள்ள லெய்ப்ஸிக் அணிக்கு எதிரான போட்டியில் இருந்து விலகியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேஸில் நாட்டைச் சேர்ந்த உலகின் முன்னணி கால்பந்து வீரரான நெய்மர், கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற உருகுவே அணிக்கு எதிரான உலகக் கிண்ணத் தகுதிச் சுற்று போட்டியில் சிறப்பாக விளையாடி பிரேஸில் அணியை 4-1 என்ற கணக்கில் வெற்றி பெறச்செய்தார்.

அதன்பின், கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பி.எஸ்.ஜி. அணியின் போட்டியில் அவர் விளையாடியிருக்கவில்லை. ஆயினும், அடுத்த வாரம் மார்செய்ல் அணிக்கு எதிரான போட்டிக்கு முன்னர் அவர் குணமடைந்து விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காயத்தையும் பொருட்படுத்தாமல் நேற்று அவர் கால்பந்தாட்டப் பயிற்சியை மேற்கொண்டமை பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

# அமெரிக்க பாரிபாஸ் ஓபன் டென்னிஸ் தொடர் மரூன் நோரி, பௌலா படோசா சம்பியன்கள்





பாரிபாஸ் ஓபன் டென்னிஸ் தொடரில் இங்கிலாந்து வீரர் கமரூன் நோரி, ஸ்பெயின் வீராங்கனை பௌலா படோசா ஆகியோர் 'சம்பியன்'பட்டம் வென்றுள்ளனர்.

பாரிபாஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டித்தொடர் அமெரிக்காவில் உள்ள இன்டியன்வெல்ஸ் நகரில் நடந்தது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் உலகத் தரவரிசையில் 26 ஆவது இடம் வகித்த இங்கிலாந்து வீரர் கமரூன் நோரி, 36 ஆம் நிலை வீரரான ஜோர்ஜியாவின் நிகோலோஸ்பாசிலாஷ்விலியை சந்தித்தார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முதல் செட்டை இழந்த கமரூன் நோரி சரிவில் இருந்து மீண்டு வந்து 3-6, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் நிகோலோஸ்சை வீழ்த்தி 'சம்பியன்'பட்டத்தைத் தனதாக்கினார். இந்த வெற்றியை பெற அவருக்கு 1 மணி 51 நிமிடங்கள் தேவைப்பட்டன. 1,000 தரவரிசை புள்ளி கொண்ட பட்டத்தை கமரூன் நோரி வெல்வது இதுவே முதல்முறையாகும். இதன் மூலம் இன்டியன்வெல்ஸ் ஒற்றையர் பட்டத்தை வென்ற முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமையையும் 26 வயதான கமரூன் நோரி சொந்தமாக்கினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின்வீராங்கனைபௌலா படோசா முன்னாள் நம்பர் வன் வீராங்கனையான விக்டோரியா அஸரென்காவை எதிர்கொண்டார். 3 மணி 4 நிமிடங்கள் நீடித்த விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் பௌலா படோசா 7-6 (7-5), 2-6, 7-6 (7-2) என்ற செட் கணக்கில் 2 முறை பட்டம் வென்றவரான அஸரென்காவுக்கு அதிர்ச்சி அளித்து 'சம்பியன்' பட்டத்தை தன்வசப்படுத்தினார். இதனால் இன்டியன்வெல்ஸ் ஒற்றையர் பட்டத்தை கைப்பற்றிய முதல் ஸ்பெயின் வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றார். இந்த ஆண்டில் அதிக நேரம் நீடித்த சர்வதேச பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மடு கோயில் மோட்டை விவசாயக் காணி ஒரு சிலரின் தூண்டுதலினால் அபகரிக்க முயற்சி

## மக்கள் போராட்டம்



மடு திருத்தலத்திற்கு உரிய கோயில் மோட்டை விவசாய காணி அபகரிப்பு செய்யப்பட்டு வருகின்றமையை கண்டித்து மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரிய பண்டிவிரிச்சான் மற்றும் சின்னப் பண்டிவிரிச்சான் கிராம மக்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று (திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் மன்னாரில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் பஜார் பகுதியில் அமைதியான முறையில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. நீண்ட காலமாக மடு திருத்தலத்துக்கு சொந்தமாக காணப்பட்ட குறித்த காணியை சிலரின் தூண்டுதலுக்கு அமைவாக அபகரிக்கப்பட்டு வருவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் குறித்த பகுதியில் இந்து மற்றும் கிறிஸ்தவ மக்கள் ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வந்துள்ள நிலையில், தற்போது ஒரு சில தீய சக்திகளால் மதப் பிரச்சினையை தோற்றுவிக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். மடு திருத்தலத்துக்கான கோயில் மோட்டை காணி பல வருடங்களைக் கொண்டுள்ள நிலையில் ,மடு ஆலய நிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையிலே குறித்த காணி தொடர்பாக சில விஷமிகளால் மதப் பிரச்சினைகளைத் தூண்டி, குறித்த காணியை அபகரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

மேற்படி கிராமங்களில் ஏழை விவசாயிகள் இருக்கின்ற நிலையில் ஒரு குழுவினர் தாங்கள் ஏழை விவசாயிகள் எனக் கூறிக்கொண்டு குறித்த காணியை அபகரிக்க முயற்சி செய்து வருகின்றதாகவும், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பஜார் பகுதியில் இருந்து மாவட்ட செயலகம் வரை ஊர்வலமாக சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்தனர். பின்னர் வட மாகாணத்தின் புதிய ஆளுநருக்கு எழுதப்பட்ட மகஜர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலிடம் கையளிக்கப்பட்டதோடு, துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# 18, 19 வயது பாடசாலை மாணவர்களுக்கு கொவிட் – 19 தடுப்பு மருந்தேற்றல் திட்டம்

கொவிட்-19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் 18, 19 வயதுடைய அனைவருக்கும் பைஸர் கொவிட்-19 தடுப்பூசி நாடளாவியரீதியில் 21 ஆம் திகதி முதல் வழங்கப்பட உள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் இந்தத் தடுப்பூசி வழங்கப்பட உள்ளது. க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாவது தடவையாகத் தோற்ற இருக்கின்ற மாணவர்களும் அவர்களது பாடசாலைகளிலேயே இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் பாடசாலையைவிட்டு விலகிய 18, 19 வயதுடையவர்களுக்கு அவர்களுடைய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் சனிக்கிழமைகளில் இத்தடுப்பூசி வழங்கப்படும்.

இத்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு 18, 19 வயதுடைய அனைவரும் தமது தேசிய அடையாள அட்டையை அன்றையதினத்தில் தமது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சமர்ப்பித்து தமது வயதை உறுதிப்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதற்கு யாழ். போதனா வைத்தியசாலையிலும், தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைகளிலும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 23, 30 ஆம் திகதி வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அல்லது பாடசாலையில் அவ்வாறான நிலைமைகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியினை பாதுகாப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு 18, 19 வயதுடையவர்களுக்குத் தடுப்பூசி வழங்கல் முடிவுக்கு வரும் நிலையில் அதனைத் தொடர்ந்து 17, 16, 15 வயதுடையவர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.





# கிளாலியில் தனியார் காணியை அளவீடு செய்து கடற்படைக்கு வழங்க எடுத்த முயற்சி முறியடிப்பு



கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிளாலி பகுதியில் தனியார் காணியை அளவீடு செய்து கடற்படைக்கு வழங்க எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் குறித்த பகுதியில் உள்ள தனியார் காணி 5 ஏக்கரைக் கடற்படையினருக்கு அளவீடு செய்து வழங்க எடுத்த முயற்சி பொது மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

அளவீட்டுப் பணிக்காக நில அளவையாளர்கள் அப்பகுதிக்குக் காலை சென்றுள்ளனர். இந்த நிலையில் மக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

# மீண்டும் ஆபத்து நிலைமையாம் சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

நாட்டு மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாமல் செயற்பட்டால் எதிர்வரும் நாள்களில் மீண்டும் அவதானமிக்க நிலைமை ஏற்படக் கூடும் என சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பயணக்கட்டுப்பாடு தொடர்பாகக் கண்டு கொள்ளாமல் கடந்த வார இறுதியில் பல மக்கள் பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்றமையை அவதானிக்க முடிந்ததாக சுகாதாரப் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது.

தற்போதைய நிலைமைக்கு மத்தியில் நாட்டு மக்கள் மேலும் சில மாதங்களுக்கு அவதானமாகச் செயற்பட வேண்டும் என மக்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் பாரிய அளவு சுற்றுலா பயணிகள் நிறைந்து காணப்படுகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு முன்னரும் சுற்றுலாப் பயணங்கள் மேற்கொண்டமையாலேயே இந்த நிலைமைக்கு முகம் கொடுத்தோம். மீண்டும் ஆபத்தான நிலைமைக்கு நாடு செல்வதற்கு வாய்ப்புகள் உள்ளன.

தயவு செய்து மேலும் சில நாள்கள் பொறுமையாக இருக்குமாறு சுகாதாரப் பிரிவு பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.10.2021இல் வெளியிடப்பெற்றது.